# சந்தைத் தோல்விக்கான காரணங்களை ஆய்வு செய்வர்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# சந்தைத் தோல்வி - Market failure

சந்தை பொருளாதாரத்தில் விலைமுறைமையானது அருமையான வளங்களைச் செயற்றிறனுடனும் நியாயத்துவமாகவும் ஒதுக்கீடு செய்யத்தவறுதல் சந்தைத்தோல்வி எனப்படும்.

## சந்தைத் தோல்விக்கான காரணங்கள்




தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் , ஆசிரியர்- பொருளியல் (யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , ஆசிரியர்- த.தொ.தொ. (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வள ஒதுக்கீட்டின் செயற்றிறனின்மை.

சமூகத்தால் விருப்பப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் அளவை சந்தைப் பொருளாதாரம் உற்பத்தி செய்யத் தவறுதல் வள ஒதுக்கீட்டின் செயற்றிறனின்மையாகும்.




தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் , ஆசிரியர்- பொருளியல் (யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி )
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , ஆசிரியர்- த.தொ.தொ. (மு/ உடையார்கட்டு.ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## வள ஒதுக்கீட்டில் நியாத்துவமின்மை

வருமானம் நியாயமற்ற முறையில் பங்கீடு செய்யப்படுதல் வள ஒதுக்கிட்டில் நியாயத்துவமின்னமை எனப்படுகின்றது.

## பேரினப் பொருளாதார உறுதியின்மை

பேரினப் பொருளாதாரத்தில் உள்ளக மற்றும் வெளியக உறுதியின்மையினை பேரினப் பொருளாதார உறுதியின்மை குறிக்கின்றது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பண்டங்களின் வகைகள்

## 1. பொதுப்பண்டம்/ தூய பொதுப்பண்டம்

நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்குதல் விதிக்கு உட்படாததும் சமூகத்தால் கூட்டாக நுகரப்படுவதுமான பண்டங்கள் சேவைகள் தூய பொதுப் பண்டங்களாகும்.

**உதாரணம்** :

சூழல் பாதுகாப்பு , கலங்கரை விளக்கம் , வீதிசமிக்கைகள்.

## 2. அரைகுறைப் பொதுப்பண்டம் / கூட்டுநுகர்வுப் பண்டம் / போலிப்பண்டம்

குறிப்பிட்ட இயலுமை மட்டம் வரை நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்குதல் விதிக்கு உட்படாதது -மான பொருட்களும் சேவைகளும் அரை குறைப் பொதுப் பண்டம் எனப்படும்.

**உதாரணம்** :

பாலம் , நூலகம் , திரைப்பட மாளிகை , பூங்கா

## 3. மேன்மைப் பண்டங்கள் / சமூகநலப் பண்டங்கள்

நுகர்வில் நேர்கணிய விளைவினைக் கொண்டதும் தனியார் நன்மைகளை விட சமூக நன்மை அதிகமாகக் கொண்டதுமான பண்டங்கள் மேன்மைப் பண்டங்கள் / சமூகநலப் பண்டங்கள் எனப்படும்.

**உதாரணம்** :

கல்வி , சுகாதாரம் , நோய்த்தடுப்பு மருந்தேற்றல்

## 4. மேன்மையற்ற பண்டங்கள் / தீங்கிழைக்கும் பண்டங்கள்

நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவு-களைக் கொண்டதும் சமூக நன்மைகளை விட தனியார் நன்மைகள் அதிகமாகக் கொண்டதுமான பண்டங்கள் சேவைகள் மேன்மையற்ற பண்டங்கள் / தீங்கிழைக்கும் பண்டங்கள் எனப்படும்.

**உதாரணம்** : மதுபானம் , சிகரட் , போதைப்பொருள்

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் , ஆசிரியர்- பொருளியல் (யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , ஆசிரியர்- த.தொ.தொ. (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk